பதிவு எண் : M. 6311 ★ தோற்றம் : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.எல்

மலர் : 16] சென்னை : ஆவணி 6 (21—8—68) புதன் ★ வெளியூர் : ஆவணி 7 (22—8—68) வியாழன் [இதழ் : 57

தூலம்தான் தீர்ப்பளிக்கும் !

"எனது பழைய நண்பர் ஒருவர் விவசாயிகளின் கோரிக்கைகளுக்காக உண்ணா நோன்பு இருப்பதாகக் கூறினார்கள்.

"என்னுடைய பழைய நண்பர்களில் பலரைக் காங்கிரசுக் காரர்கள் தங்களோடு சேர்த்துக்கொண்டார்கள். அது அவர்களுக்கு நல்லதா -- அந்த இயக்கத்திற்கு நல்லதா -- நாட்டிற்கு நல்லதா -- என்பதுபற்றிக் காலமேதான் தீர்ப்பளிக்கப்போகிறது."

--முதலமைச்சர் அண்ணா
(சட்டமன்ற மேலவையில்)

பேரறிஞர் அண்ணா மணிவிழா

செப். 15 தொடங்கி 30-ம் நாள் வரை நாடெங்கும் கொண்டாடுக!

அமைப்புச் செயலாளர் வேண்டுகோள்

நாட்டின் முதல்வர் --- நம் கழகத்தின் தனிப் பெருந்தலைவர் --- அண்ணா அவர்களின் மணிவிழாவீன் செப்டம்பர் 15-ம் நாள்முதல் செப்டம்பர் திங்கள் இறுதிவரை சிற்றூர், பேரூர், நகரம், பெருநகரம், வட்டம், மாவட்டம் ஆகிய கழகத்தின் எல்லா அமைப்புச்களும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அறிஞர் அண்ணு அவர்கள் தமது பொதுவாழ்வின் மூலம் நம் நாட்டின் நல்வாழ்வுக்கும், ஏழை--எளிய மக்களின் ஏற்றத்திற்கும் அயராது பாடுபட்ட தன்மைகளீன நாடு நனகு உணர்ந்திருக்கிறது.

நாட்டின் சமுதாயத்துறை --அரசியல் துறை --- தொழிலாளர்துறை --- கலீத்துறை --- கல்வித்துறை உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் அண்ணு அவர்கள் ஈடுபாடு கொண்டு நாட்டுக்கே தனிச் சிறப்பை ஏறபடுத்தியிருக் கிறார்கள் என்பதை இன்று உலக நாடுகளும் உணர்ந்து பாராட்டுகின்றன.

இவ்விதப் புகழுக்குரிய நம் அண்ணு அவர்களின் மணிவிழாவீன வரலாற்றுச் சிறப்புமிக்கதாகக் கொண்டாட வேண்டுவது நம் ஒவ்வொரு வரின் நீங்காக் கடமையாகும்.

விழா நாட்களில்...

★ அறிஞர் அண்ணு அவர்களின் எழுத்தோவியங்களீ வெளியிட்டு எங்கும் பரப்புதல் ;

★ அறிஞர் அண்ணு அவர்களின் சொற்பொழிவுகளீப் பதிவு செய்து வைத்திருப்போர், பட்டிதொட்டிகளிலெல்லாம் ஒலிபரப்புதல் ;

★ அறிஞர் அண்ணு அவர்கள் வழங்கியுள்ள நாடகங்களீ நாடெங்கும் எளீய முறையிலும், சீரிய தன்மையிலும் நடித்துக் காட்டுதல் ;

★ அறிஞர் அண்ணு அவர்களின் தொழிலாளர் நலன் பேணும் கொள்கைகளீப் பாட்டாளித் தோழர்களிடையே பரப்புதல் ;

★ அறிஞர் அண்ணு அவர்கள் மொழிக் கொள்கையின் மூல மாகக் கண்ட வெற்றியீனை நாடெங்கும் முழக்குதல் ;

★ அறிஞர் அண்ணு அவர்களீத் தலீவராகக்கொண்டு இயங்கும் தமிழக அமைச்சரவையின் சாதனைகளீ எவரும் அறியும் வண்ணம் எடுத்துரைத்தல் ;

★ ஏழை -- எளியவர்களுக்கு உணவும், உடையும், இன்ன பிற உதவிகளீயும் வாரி வழங்குதல் ;

★ பள்ளிச் சிறுர்களுக்குப் பலகை, புத்தகம், இனிப்பு ஆகியன வழங்குதல் ;

★ ஊரெங்கும் --- நாடெங்கும் ஊர்வலங்களும், விழாக் கூட்டங்களும் சிறப்புற நடத்துதல் ;

★ வீடெங்கும் --- வீதியெங்கும் வண்ணக்கோலமிட்டும், கழகக் கொடிகளீ ஏற்றியும், தோரணங்களீக் கட்டி அலங்கரித்தும், அண்ணு--அண்ணியார் ஆகியோருடைய திருவுருவப் படங்களீ அலங்கரித்தும் விழாக் கொண்டாடுதல் ---

போன்ற செயல்முறைகளின் வாயிலாக --- மணிவிழாவினீ ஊரும் உலகமும் போற்றும் வகையில் கொண்டாடுவதற்கு இன்றே முனீந்து அதற்கான ஏற்பாடுகளீ மேற்கொளளுமாறு கழகத்தின் எல்லா அமைப்புகளீயும், கழகச் சார்புடைய எல்லாத் தூண அமைப்புகளீயும், நிறுவனங்களீயும், கழக ஆதரவாளர்களீயும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-18
20—8—1968

என். வி. நடராசன்,
அமைப்புச் செயலாளர் (தி.மு.க.)

ஆலைகளீ மூடுவதற்கு மத்திய அரசே காரணம்

மீண்டும் திறக்கும் முயற்சிக்கும் டில்லியே முட்டுக்கட்டை

ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்ற காங்கிரசார் ஒத்துழைப்பரா?

சென்னை, ஆக. 20—

"கோவையில் மூடியிருக்கும் ஆலைகளீத் திறக்கவும், மூடும் தறுவாயிலிருக்கிற ஆலைகளீச் சீர்பெறச் செய்யவும் மாநில அரசு மட்டும் முயற்சி எடுத்துக்கொண்டால் போதாது; மத்திய அரசும் உதவ வேண்டும். மாநில அரசைப் பொறுத்த வரை, தன்னுல் முடிந்த அளவு நட்வடிக்கை எடுத்து வருகிறது.

"டாக்டர் லோகநாதன் குழுவை நியமித்தோம். 'ஆலைகளுக்குக் கடன்தர பாங்கிகள் முன்வந்தால், அந்தக் கடனுக்கு உத்தரவாதம் தருகிறோம்' என்று கூறினோம்; அந்த முறையில் ரூ. 2 கோடி நர ஏற்பாடும் நடைபெற்றது. எங்களால் செய்யக்கூடிய காரியங்களீயெல்லாம் செய்துவிட்டு மத்திய அரசை அணுகினோம்.

"கோவை ஆலைத் தொழில முடக்கத்திற்கு முக்கியக் காரணம் 'எக்சைஸ்' வரியைக் கண்மூடித்தனமாக ஏற்றியதுதான் என்று புள்ளிவிவரத்தோடு ஆலை முதலாளிகள் மத்திய அரசை அணுகிக் கூறினர்கள்.

"நானும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் மத்திய அரசை அணுகி 'எக்சைஸ்' வரியை நீக்கவேண்டும் என்று கோரினேன்; மத்திய நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் அந்த வேண்டுகோளை நிராகரித்துவிட்டார்; 'ஆலைகள் இயங்கும் வரையிலாவது அந்த வரியை நீக்கிவிடுங்கள்' என்று கோரினேன்; அதற்கும் அவர் சம்மதிக்க மறுத்துவிட்டர்.

"கோவையில் ஆலைகள் மூடப்பட்டால், முதலாளிகள் வேண்டுமானுல் வேறு தொழிலத் தேடிக்கொண்டு எளிதில் போய்விட முடியும்; ஆனுல் தொழிலாளிகள் அப்படியல்ல! வேலையிழந்து அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைவதைப் பார்த்துக் கொண்டு செயலற்றுக் கிடப்பது ஒரு நாகரிக அரசுக்கு அழகல்ல!

"உடனடியாக அரசாங்கம் அந்த ஆலைகளீ எடுத்து நடத்திவிட முடியாது; மத்திய அரசுக்கு முதலில் தெரிவிக்க வேண்டும். அதற்குப் பிறகு மத்திய அரசு ஒரு குழுவை அனுப்பி, 'அரசாங்கம் எடுத்து நடத்துவது தவறில்லை' என்று அது கூறிய பிறகுதான் அரசாங்கம் ஆலைகளீ ஏற்று நடத்தவேண்டும்.

"கோவை ஆலைகளீப் பற்றி நாங்கள் கடிதப் போக்குவரத்து நடத்திப் பார்த்தோம்; அது பயன் இல்லை என்றதும், டில்லிக்கு நேரில் சென்று வற்புறுத்தினேன்; ஆலைகளீப் பற்றி ஆராயக் குழு போட முதலில் ஒப்புக்கொண்டார்கள்; 'ஒரே குழு இத்தனை ஆலைகளீப் பற்றியும் ஆய்ந்தறியவது என்றுல் ஆண்டுக் கணக்காகும்' என்று கருதி, இரண்டு---மூன்று குழுக்கள் போட வேண்டும் என்று வாதாடினோம்; இப்போது மூன்று குழுக்கள அந்த ஆலைகளீப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும என்று முடிவாகிவிட்டது.

"இவற்றிற்கெல்லாம் பிறகு ஆலைகள் நடக்கக் கொஞ்சம் பணம் போட வேண்டுமென்றுலும், 'பாதி மத்திய அரசு போட்டாலும் --- பாதி நாங்கள் போடுகிறோம்' என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

"தேங்கியிருக்கிற நூலை மத்திய அரசு வாங்கி வைத்துக்கொண்டால் தேக்கம் நீங்கி தொழில் நடக்கும் எனக் கருதி, மத்திய அரசு, தேங்கியிருக்கும் நூலை வாங்க ஒரு திட்டம் வகுக்கப் படுள்ளது --- ஆறு திங்களுக்கு முன்பு!

"திட்டம் தீட்டப்பட்டது--ஆறு திங்களுக்கு முன்பு; 'இதோ முடிவாகிவிட்டது' என்குர்கள்---நானும் திங்களுக்கு முன்பு; 'இதோ வந்துவிட்டது' என்குர்கள்---இரண்டு திங்களுக்கு முன்பு!

"சென்ற திங்கள் நான் டில்லி சென்றபோது, அந்தத் திட்டத்தின்படி நூல்கள் வாங்குவதில் வட்டி விகிதத் தகராறு இருப்பதாகக் கூறினர்கள்; 'வட்டி விகிதம் எதுவாக இருந்தாலும் ஆலை முதலாளிகள் ஒப்புக்கொள்ள வேண்டும்' என்று நான் வற்புறுத்தி ஆலை முதலாளிகளீன ஒப்புக்கொள்ளச் செய்த பிறகும், இனனும் பணம் வந்து சேரவில்லை! 'ஜிலி ஏதாவது நட்டம் வந்தால் 50 சதவிகிதம ஒப்புக்கொள்கிறேன்' என்று கூறிவிட்டும் வந்தேன்; ஆனுல், இதுவரையில் மத்திய அரசு

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1999 ஆவணி 6 (21—8—68) புதன்

புதிய முட்டுக்கட்டை?

தமிழகத்தின் பழைய கோரிக்கைகளில் ஒன்று -- சேலத்தில் உருக்காலை துவங்குவது. தங்களுக்குள்ளாக இருந்திடக்கூடிய வேற்றுமைகளை மறந்து, இக்கோரிக்கையை அனைத்து அரசியல் கட்சிகளும் வற்புறுத்திவந்துள்ளன.

இக்கோரிக்கை கிளம்பிய நாள்தொட்டு, இதற்கு எதிரான சில காரணங்கள், இந்திய அரசின் சார்பில் சாட்டப்பட்டு வந்துள்ளன; 'கஞ்சமலைப் பகுதியில் கிடைக்கின்ற இரும்புக் கனிப் பொருளில், இரும்புச் சத்து குறைவாக இருக்கிறது' எனக் கூறி, உருக்கு ஆலைக் கோரிக்கைக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது.

மேற்படி கனிப் பொருளிலிருந்து, இந்தியாவின் தேவைக்குப் பற்றாக்குறையாக இருந்துவரக்கூடிய உயர்தர தனி ரக உருக்கைத் தயாரிக்க முடியும் என விளக்கம் தரப்பட்டதும், 'இரும்புச் சத்துக் குறைவு' என்ற முட்டுக்கட்டை வாதம் தரைமட்டமாக்கப்பட்டது.

இதற்குப் பின்னர், 'கனிப் பொருளைத் தூய்மைப்படுத்தித் தனி ரக உருக்கு ஆக்குவதற்குத் தேவைப்படக்கூடிய நிலக்கரி தமிழகத்தில் இல்லாததனால், தொலைவிலுள்ள வடநாட்டிலிருந்து நிலக்கரியைக் கொண்டுவருவதன் மூலம் உற்பத்திச் செலவு கூடிவிடக்கூடும்; எனவே, இலாபகரமாக உருக்கு உற்பத்தி இருக்க முடியாது' எனக் கூறி, இரண்டாவது முட்டுக்கட்டை போடப்பட்டது.

இம்முட்டுக்கட்டையும் -- நெய்வேலி பழுப்புக் கரி கிடைக்கப் பெற்றதன் விளைவாக -- தகர்க்கப்பட்டுவிட்டது. இதற்குப் பின்னர், சேலம் உருக்காலைக் கோரிக்கையை மறுப்பதற்கு, வேறு முட்டுக்கட்டையைத் தேடியது இந்திய அரசு!

"சேலத்தில் உருக்காலையைத் துவங்க அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது; அந்தச் செலாவணிக்கு எங்கே போவது?" என்ற கேள்வியைக் கிளப்பி, தமிழகத்தின் உருக்காலைக் கோரிக்கைக்கு மூன்றாவது முட்டுக்கட்டையைப் போட்டது இந்திய அரசு. 'ஜப்பான் நாட்டு உதவியுடன் சேலம் உருக்காலையைத் துவக்க முடியும்' என்ற நிலை உருவானதும், 'இனிச் சேலம் உருக்காலைக் கோரிக்கையைத் தடுத்து நிறுத்த முடியாது' என்ற கலக்கம் இந்திய அரசுக்கு ஏற்பட்டுவிட்டது.

இதற்கிடையில், சேலம் உருக்காலையைத் துவங்க இந்திய அரசு விரும்பவில்லையானால், சொந்தப் பொறுப்பிலாவது அதைத் துவங்குவது எனத் தமிழக அரசு முடிவு எடுத்து, தொழிற்சாலைக்கான நிலத்தையும் ஒதுக்கீடு செய்து, தொழிற்சாலை துவங்குவதற்குத் தேவைப்படும் அனுமதியைக் கோரி இந்திய அரசிடம் மனு ஒன்றும் கொடுத்தது.

இந்தக் கட்டத்தில், இந்திய அரசில் உருக்கு அமைச்சர் மாற்றம் ஏற்பட்டது. இம்மாற்றத்தின் காரணமாக, துவங்கப்படக் கூடிய உருக்காலை, 'தமிழகத்திலா? ஆந்திரத்திலா? மைசூரிலா?' என்ற குழப்பம் தலைதூக்கியது.

இப்புதிய குழப்பத்திலேயே ஆண்டுகள் சில உருண்டோடின. தமிழகத்தில் காங்கிரசு ஆட்சி அகற்றப்பட்டு, கழக ஆட்சி இடம் பெற்றது.

சேலம் உருக்காலைக் கோரிக்கையை முன்வைத்து, தமிழக நகரங்கள்---பட்டிதொட்டிகள் அனைத்திலும் பொதுக்கூட்டங்கள் நடத்தி, தீர்மானங்கள் நிறைவேற்றி இந்திய அரசுக்கு அனுபபப்பட்டன. இந்த 'எழுச்சி நாள்' கூட்டங்களில் காங்கிரசுக் கட்சி நீங்கலாக மற்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் பங்கு கொண்டன.

தமிழக முதல்வரும் தொழில் அமைச்சரும், சேலம் உருக்காலை துவங்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையை, இந்திய அரசிடம்---வாய்ப்பு நேரிடுகின்றபொதெல்லாம்---தீவிரமாக வற்புறுத்தி வந்துள்ளனர்.

எப்படியும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதி வடிவத்தை அடைகின்றபொழுது, அத்திட்டத்தில் சேலம் உருக்காலை ஏற்பாடு இடம் பெற்றே தீரும் என்ற நம்பிக்கை, தமிழ் மக்களிடம் வலிவு பெற்று வரலாயிற்று.

ஆனால், 'தமிழ் மக்கள் வைத்திருக்கின்ற அந்த நம்பிக்கை நிறைவேறாதோ' என்ற ஐயத்தைத் தரக்கூடிய அவலச் செய்தி ஒன்று, புதுடில்லியிலிருந்து இப்பொழுது வந்துள்ளது.

நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் அவர்கள், சேலம் உருக்காலை பற்றிய கேள்வியைக் கிளப்பியுள்ளார்.

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்காலை ஏற்பாடு சேர்க்கப்படுமா, இல்லையா?" என்பதுதான் கேள்வி.

அக்கேள்விக்கு, 'உண்டு அல்லது இல்லை' என்ற பதிலை இரும்பு---சுரங்கத்துறை இராசாங்க அமைச்சர் சேத்தி கூறாமல், மழுப்பலாகப் பதிலளித்துள்ளார்.

"நான்காவது திட்டத்தில் இரும்புத் தேவையைக் கணக்கிட்டு – அதுபற்றிய அறிக்கையை ஆராய்ந்து – சேலம் உருக்காலை பற்றி முடிவு செய்யப்படும்" என அமைச்சர் பதிலளித்துள்ளார்.

நான்காவது திட்டக் காலத்தில் நாட்டின் இரும்புத் தேவை எவ்வளவு என்ற ஆராய்ச்சியில் -- அந்தத் தேவை பொகாரோ உருக்காலையில் உற்பத்தியாகும் இரும்பு அளவுடன் நிறைவு பெற்றுவிடும் என்ற நிலை ஏற்படும்பட்சத்தில் -- சேலம் உருக்காலை நான்காவது திட்டத்தில் இடம்பெற முடியாது என்பதுதான், அமைச்சரின் பதிலிலிருந்து யூகிக்கக்கூடிய முடிவு ஆகும். தேவையைக் கணக்கிட்டு சேலம் உருக்காலையைப் பற்றி முடிவு செய்வது என்ற இந்திய அரசின் புதிய கோலத்தை, 'இந்திய அரசு தேடி எடுத்த புதிய முட்டுக்கட்டை' என்றுதான் தமிழ் மக்கள் தீர்மானித்துக் கொள்ளுவர்.

—கா. க.

வருமானம்மட்டுமல்ல--தரமும்உயரும்

அரசியல் நோக்கம் ஏற்படுமோ என ஐயம் வேண்டாம்

தேவை என்பதாலேயே 'செய்திக் கதிர்' தயாரிக்கிறோம்

திரைப் படப் பரிசுத் திட்டம்பற்றி அண்ணா விளக்கம்

சென்னை, ஆக. 19—

சட்டமன்றத்தில், துணை மானியக் கோரிக்கைமீது நடந்த விவாதத்துக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பதிலளித்து உரையாற்றுகையில், சிறந்த திரைப் படத்துக்குப் பரிசளிப்புத் திட்டம் பற்றியும், 'செய்திக் கதிர்' பற்றியும் குறிப்பிட்டதாவது:—

"இரண்டே இரண்டு விஷயங்களுக்குத்தான் சிலர் அதிருப்தியைத் தெரிவித்தார்கள்; திரைப் படங்களுக்குப் பரிசு கொடுக்க வேண்டுமா என்றும், செய்திக் கதிர் வெளியிடுவதற்கு ஒரு இலட்சம் ஒதுக்குவது நியாயந்தானா என்றும் கேட்டார்கள்.

இது அவரவர்களுக்கு இருக்கிற சுவையை -- விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்தது. தரமான திரைப் படங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் பரிசு வழங்குகிறோம் என்பதைப் பார்க்கும்பொழுது, திரைப்படத் துறையின் மூலமாக அரசு அடைகின்ற ஆதாயத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆறு கோடி -- ஏழு கோடி ரூபாய்க்குப் பொழுதுபோக்கு வரி பெறுகிறோம். நல்ல படங்கள் வெளிவருவதன்மூலம் அதிகமான மக்கள் பார்க்கத்தக்க நிலைமையில்—இதற்காக நாம் செலவழிக்கின்ற தொகைக்கு ஏற்ப ஒரு கோடி ரூபாய்வரை இன்னும் அதிகமாக வருமானம் வரும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தால் அவர்கள் அதைப் பற்றிக் கேட்டிருக்க மாட்டார்கள்.....

என். எஸ். வி. சித்தன்:—"முதலமைச்சர் அவர்கள் பேசும் போது, 'நிறைய வருமானம் வரும்' என்று சொன்னார்கள். அப்படியானால், நிறைய வருமானம் வரும் என்பதற்காக மதுவிலக்கை எடுப்பதுபற்றி யோசிக்கிறார்களா?"

அண்ணா:—"அவரை (சித்தனை)ப் போன்று கருதிக்கொண்டவர்கள்தான், காங்கிரசு மாநிலத்திலே மதுவிலக்கை எடுத்து விட்டார்கள். நான் சொல்லுவது, வருமானம் வருகிறது என்பதைப் பொறுத்து மட்டுமல்ல -- தரம் உயரும் என்பதற்காகவும் சொன்னேன். உடனே காங்கிரசுக் காரர்கள், முன்னாலே உள்ளதைவிட நல்ல தரம் உள்ள மதுவைத் தயாரிக்கலாம் என்று சொல்லுவார்கள்; அதனால் இன்னும் வருமானம் அதிகமாக வரும்.....

வினாயகம் (ஆங்கிலத்தில்):—"நாம் கடைபிடிக்கும் கொள்கை எதுவாயினும் அண்டை மாநிலம் ஒன்றின் கொள்கையை இம்மாதிரி முதலமைச்சர் குறை கூறுவது சரியாகுமா? இதை எப்படி, 'நல்ல ரசனை' என்பது?"

அண்ணா (ஆங்கிலத்தில்):—"ரசனைபற்றிப் பேசுவதானால், அது ஒருதலைப்பட்சமானதல்ல; இருசாராருக்கும் பொருந்தும். பணம் சம்பாதிப்பதற்காக, நான், மதுவிலக்கையும் கைவிடலாம் என்று உறுப்பினர் யோசனை கூறினாரே -- அது சரிதானா? அது நல்ல ரசனை அல்ல."

வினாயகம்:—"அவைமுன் உள்ள கேள்வி எல்லாம், அண்டை மாநிலத்தாரின் கொள்கையைக் குறை கூறியதில் முதலமைச்சரது செயல் சரியானதுதானா என்பதே; அத்தகைய விஷயங்களில் நாம் தலையிடுவதில்லை; இதுதான் சம்பிரதாயம்; எனவே தான் கேட்டேன்."

அண்ணா:— "உறுப்பினர் சொல்லுவது முற்றிலும் சரியே; நான் அண்டை மாநில அரசு எதையேனும் குறை கூறியிருந்தால் இவர் எனக்குச் சுட்டிக் காட்டிடலாம்; ஆனால், நான் ஓர் உண்மை விவரத்தை மட்டுமே இங்கு தெரிவிக்கிறேன். ஆகையினாலே கனம் உறுப்பினர் சொன்ன யோசனையை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'செய்திக் கதிர்' தயாரிப்பது தேவைதானா என்று கேட்டார்கள்; தேவை என்று அரசுக்குத்தோன்றியதால்தான் தயாரிக்கிறார்கள்; அரசுக்குத் தேவை என்பதிலே ஐயப்பாடு இல்லை என்பதை அவர்கள் உணருகிறார்கள்; ஆனால், 'தேவையில்லை' என்ற உணர்வு அவர்களுக்கு இருக்கலாம்; எங்களுக்குத் தேவை என்று நினைக்கிறோம்; அதிலே, 'அமைச்சர் முகங்கள்தான் வருகின்றன; மற்ற முகங்கள் வருவதில்லை' என்றால் எல்லா முகங்களும் வர வேண்டுமென்றுதான் செய்து வருகிறோம். அதிலே சில முகங்கள் வரவில்லை என்றால், அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர்.

பொழுதுபோக்குச் சாதனம் மட்டுமல்ல!

இராமமூர்த்தி அவர்கள், 'இரவு நடன'த்திற்குப் போவார்; ஆனால், அவருக்குச் சினிமா எப்படி பிடிக்காமற் போய்விட்டது என்று ஆச்சரியப்பட்டேன்.

சினிமாத்துறை என்பது வெறும் பொழுதுபோக்குச் சாதனம் மட்டும் அல்ல—பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தொழில் தருகிற ஒரு சாதனமும் ஆகும். விஞ்ஞானக் கருவிகளுக்கு நல்ல வாய்ப்பு அளிக்கின்ற சாதனம். மக்களின் கற்பனைத் திறனும், நடிப்புத் திறனும் மேம்பாடு அடையச் செய்யும் சாதனம்.

ஆகவே, அவற்றுக்குத் தரம் அறிந்து பரிசு கொடுப்பது அரசு செய்யும் காரியங்களில் ஒன்று.

நல்ல புத்தகம் எழுதுபவர்களுக்குப் பரிசு அளிப்பதுபோல்---நல்ல இசைவாணர்களுக்குப் பரிசு அளிப்பதுபோல்---நல்ல சினிமா நடிகருக்குப் பாராட்டுத் தெரிவிப்பதுபோல்---நல்ல படத்திற்குப் பரிசு அளிப்பது வருவாயை உயர்த்தவும், தரத்தை உயர்த்தவும் பயன்படும். அம்முறையில், ஒரு இலட்சத்திற்குச் சற்று அதிகம் செலவழிப்பது என்றால், அதை நண்பர் சித்தன் அவர்கள் 'பொறுத்தருளுவார்கள்' என்று கருதுகிறேன்...

கே. வினாயகம்:—"அரசியல் நோக்கம் உள்வராது என்ற உத்தரவாதம் அளிக்கப்படுமா?"

அண்ணா:—"அரசியல் நோக்கம் உள்வராதா---என்று கேட்டார்கள். சினிமாவில் அரசியல் இருக்கலாமா என்பது ரொம்ப நாள் பேசப்பட்டு --- 'சினிமாக் காரர்கள் அரசியலுக்கு வரலாமா' என்ற கேள்வி கேட்கப்பட்டு---அதற்குப் பிறகு தேடித் தேடி அவர்களை அரசியல் மேடைக்குக் கொண்டுவந்து---அதற்குப் பிறகு, 'இப்போது அது அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுமா' என்று நண்பர் அவர்கள் கேட்கிறார்கள்.

என்னைப் பொறுத்த வரையில், நான் ஓரளவிற்குக் கலை விஷயத்தில் நல்ல நோக்கோடு உள்ளவன். அதுமட்டுமல்ல; அரசியலைக்கூட ஒரு கலை என்று நான் கருதுகிறேன்; அரசியல் என்றால், ஏதோ, 'கலைக்கு அப்பாற்பட்டது' என்று பொருள் அல்ல. கலை என்பதே, சீர்படுத்தப்பட்ட -- ஒழுங்குபடுத்தப்பட்ட --- மேம்படுத்தப்பட்ட திறமை அவ்வளவும், 'கலை' என்று தலைப்பில் வரும்.

ஆகவே, 'அரசியல் நோக்கம் கலக்குமா' என்று கேட்கிற போது, வேறு ஏதோ கேட்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டு பாதிஅளவிலே நின்று விடுகிறார்கள்.

அவர்கள் கேட்க எண்ணியதை நான் சொல்கிறேன். 'காங்கிரசுப் பற்றுள்ள நடிகர்கள் நடித்த படங்களுக்குப் பரிசு கிடைக்காமல் போய்விடுமோ' என்று நண்பர்கள் சொல்வார்களேயானால், நான் பெயரைக் குறிப்பிடாமல் சொல்ல விரும்புகிறேன்—நீங்கள் யாரை, 'காங்கிரசுப் பற்றுள்ள நடிகர்' என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ, அவரும் என் தம்பிகளில் ஒருவர் என்ற முறையில், எந்தவிதமான அரசியல் நோக்கிலும் கலக்கப்படமாட்டாது என்று உறுதி அளிக்க விரும்புகிறேன்.

ஆனால், அது 'முதல்தரமான படமா' என்று அதற்குரிய குழு தீர்மானிக்க வேண்டுமே தவிர, நானோ வினாயகமோ அல்ல. நாங்கள் பாதித் தூக்கத்தில் பார்க்கிறபோது, தரமுள்ள படமெல்லாம்கூட தரமற்றதாகத் தெரியக்கூடும்; ஆனால் அந்தக் குழு, அதற்கென்று உட்கார்ந்திருப்பதாகும்; அவர்களுக்குள்ள சில இலக்கணங்களை வைத்துக்கொண்டு பரிசுகள் வழங்குவார்கள்."

ஏனைய தொழில் துறைகட்கும் பரிசளிப்புத் திட்டம்

'வாய்ப்பு நேரும்போது கவனிக்கப்படும்'-- அண்ணா உறுதி

நா. காசிராமன் (காங்கிரசு);—"சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கட்கு -- அந்தக் கலையில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றவகையில் இத்திட்டத்தை (பரிசளிப்பு) வகுத்திருப்பதாகச் சொன்னார்கள்; நல்ல காரியந்தான், அதேபோல் தமிழ்நாட்டில் பல தொழிற்சாலைகளில் பல பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன; அந்தந்தத் தொழில்களை எடுத்து -- அதற்குத் தகுந்தாற்போல் இம்மாதிரி பரிசு வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தினால், தரமான பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்புவதோடு, அது சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக்கூடும் என்பதால், அதைக் கருத்தில் கொண்டு ஏதாவது செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்."

அண்ணா:— "இந்த மேலான யோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன் — அடுத்த சந்தர்ப்பம் கிடைக்கிறபோது அதை நான் நிச்சயமாக நிறைவேற்றுவேன். ஆனால், இப்போதுகூட, 'எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில்' மூலம், தாராளமாக ஏற்றுமதி செய்கிறவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதேபோல், புதுக் கண்டுபிடிப்புகள் செய்கிறவர்களுக்குப் பரிசுகளும், பாராட்டுகளும் வழங்கப்படுகின்றன. அதை இன்னும் விரிவான முறையில் அமல் நடத்த வேண்டும் என்பதுதான் என் நோக்கமும்கூட!

"கைத்தறியில் நல்ல பார்டர் டிசைன்களுக்குக்கூடப் பரிசுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன."

பள்ளிக்கரணையில் அனாதை விடுதி--பள்ளிக்கூடம்

அறிஞர் அண்ணா அறிவுக்கூடமாக அமையும்

சென்னை, ஆக. 19—

அறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாளையொட்டி வேளச்சேரிக்கு அருகிலுள்ள பள்ளிக்கரணையில் ஒரு அனாதை விடுதி---பள்ளிககூடம்---தங்கும் விடுதி---நூலகம் ஆகியவை துவங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ரூ. 10 இலட்சம் செலவில் ஏழு பிளாச்குகள் கட்டப்படும். அந்த இடத்துக்கு 'அறிஞர் அண்ணா அறிவுக்கூடம்' எனப் பெயரிடப்படும்.

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (காப்பாளர்); திரு. என். வி. நடராசன் (தலைவர்); திரு. முனு. ஆதி (துணைத் தலைவர்); திரு. பவளவண்ணன் (செயலாளர்) ஆகியோரைக்கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று பள்ளிக்கரணையில், அறிஞர் அண்ணா அறிவுக்கூடத்துக்கு அமைச்சர் மு. கருணாநிதி அடிக்கல் நாட்டினார்; அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமைதாங்கினார்

அறிவுக்கூடம் தற்போதைக்குக் கூரைபோட்ட குடிசைகளில் இயங்கும். ஓராண்டுக் காலத்தில் கட்டிடங்கள் தயாராகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செப். 15-ந்தேதியன்று அறிஞர் அண்ணா அவர்களின் சிலை திறந்துவைக்கப்படும்.

கால்கோள் விழா நிகழ்ச்சிகள்

உயர்நிலைப் பள்ளிக்கான அடிக்கல் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் நாட்டி வைக்கப்பட்டது.

திரு. என். வி. நடராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். பெயரால் அமைந்த சதுக்கத்திற்கு உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் பெயரால் அமைந்த சதுக்கத்திற்கு வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

கே. ஏ. மதியழகன் பெயரால் அமைந்த சதுக்கத்திற்கு திரு. முனு. ஆதி அடிக்கல் நாட்டினார்.

கலைஞர் கருணாநிதி பெயரால் அமைந்த சதுக்கத்திற்கு திரு. என். வி. நடராசன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

நாவலர் நெடுஞ்செழியன் பெயரால் அமைந்த சதுககத்திற்கு செய்தித் துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

சத்தியவாணிமுத்து பெயரால் அமைந்த சதுக்கத்திற்கு திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

துணை மேயர் பவளவண்ணன் நன்றி கூறினார்.

ஏற்றுக்கொண்ட பயிற்று மொழியை மாற்ற இயலாது!

விருப்பமில்லாதவர்கள் விலகி மற்றவர்கட்கு இடமளிக்கலாம்

கல்வியமைச்சர் திட்டவட்டமான அறிவிப்பு

சென்னை, ஆக. 19—

"கல்லூரிகளில் படிப்படியாகத் தமிழைப் பயிற்று மொழியாக ஆக்குவது என்பது அரசினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாகும்; இதிலிருந்து பின் வாங்குவதற்கில்லை"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் அறிவித்தார்.

சென்னை அரசினர் கலைக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள், தமிழ்ப் பயிற்று மொழிக்குப் பதிலாக ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புக்கு மாற்றும்படி கோரிக்கை விடுத்திருப்பது சம்பந்தமாக டாக்டர் ஹண்டே (சுத.) ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தார்.

அதற்குப் பதிலளித்து, கல்வி அமைச்சர் பேசுகையில் கூறியதாவது:—

"இது ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் வராது; தமிழ்ப் பயிற்று மொழி வகுப்பில் யாரையும் கட்டாயப்படுத்திச் சேர்த்துக் கொள்ளவில்லை; அதில் விருப்பம் இல்லாதவர்கள் விலகி, 'கியூ' வரிசையில் காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இடம் தரலாம்.

"தமிழ்ப் பயிற்று மொழி வகுப்பில் படிப்பவர்களை ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்பிற்கு மாற்றுவது இயலாது.

"மாநிலத்தில் உள்ள 123 கல்லூரிகளில் 32 அரசினர் கல்லூரிகளில் மட்டும்தான் தமிழ் பயிற்று மொழி புகுத்தப்பட்டுள்ளன; இதன்படி மொத்தம் 56,000 மாணவர்களில் 12,800 பேர்களுக்குத்தான் புகுமுக வகுப்பில் தமிழ் பயிற்று மொழி மொழி வகுப்பில் இடமளிக்கப்பட்டுள்ளது.

"தனியார்துறை கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்பில் சேர்ந்து படிக்க வசதி இருக்கிறது.

"தாய் மொழியைப் பயிற்று மொழியாக்குவது என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை, மற்றவர்களுக்குப் பாதகம் ஏற்படாதவகையில் படிப்படியாக நிறைவேற்றப்படுகிறது.

"தமிழ் பயிற்று மொழி வகுப்பில் விரும்பி,ச் சேர்ந்தவர்கள், தற்பொழுது, ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புக்குத் தங்களை மாற்றவேண்டும் என்று கோருவது தந்திரத்தின்பாற்பட்டதேயாகும்."

சிசர்ஸ் போட்டியில் சேருங்கள்—

"முகச்சாயலை பார்த்து நட்சத்திரங்களின் பெயர்களைக் கூறும்"

பெறுவீர்

ரூ. 30,000

முதல் பரிசு ரூ. 19,000
2வது பரிசு ரூ. 8,000
3வது பரிசு ரூ. 3,000

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்:

இந்த பத்து முகச்சாயல்களும் 10 பிரபல இந்திய திரைப்பட நட்சத்திரங்களினுடையவை. இவர்களில் ஐவர் பம்பாய் திரைப்பட நடிகர்கள். நால்வர் தென்னிந்திய திரைப்படங்களிலும், ஒருவர் கிழக்கு இந்திய திரைப்படங்களிலும் நடிப்பவர்கள். "பெயர்களை இங்கே எழுதுங்கள்" என்று குறிப்பிட்டுள்ள கட்டத்தில் '1'க்கு அடுத்த காலியான இடத்தில் முகச்சாயல் '1' என்று குறிப்பிடப்பட்டுள்ள நட்சத்திரத்தின் பெயரை எழுதுங்கள். (உதாரணம்: முகச்சாயல் '1' 'விமி' என்ற திரைப்பட நட்சத்திரத்தினுடையது என்றால் கட்டத்தில் '1' எண்ணுக்கு அடுத்த காலி இடத்தில் 'விமி' என்று எழுதுங்கள்.) இதே மாதிரி '1' முதல் '10' வரையுள்ள எல்லா காலி இடங்களையும் பூர்த்தி செய்யுங்கள். அவ்விதம் செய்த பிறகு கோரப்படும் இதர விவரங்களையும் எழுதி, 5 (ஐந்து) காலி சிசர்ஸ் பாக்கெட்டுகளையும் அடக்கம் செய்து இந்த அறிவிப்பில் கண்ட முகவரிகளில் ஒன்றுக்கு அனுப்புங்கள்.

முக்கிய விதிகள்:

இப்போட்டியில் கலந்துகொள்ளும் ஒருவர் எத்தனை விடைகள் அனுப்பியிருந்தாலும் அவர் ஒரு பரிசுக்குமேல் பெறுவதற்குத் தகுதியுடையவராகார்.

சரியான விடை பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

இந்தப் போட்டியில் இந்தியாவில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இந்தியப் பிரஜைகள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

சிகரெட் கடைகளில் கிடைக்கும் விடை அனுப்புவதற்கான பாரங்களில் முழு விதிகளும், நிபந்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

முடிவு தேதி செப்டம்பர் 30, 1968

சிசர்ஸ் சிகரெட்டுகள் தயாரிப்பவர்களால் நடத்தப்படுகிறது.

இங்கே கத்தரிக்கவும்

இதை விடை அனுப்புவதற்கான பாரமாக பயன்படுத்தவும்
(இங்கு பெயர்களைப் பூர்த்தி செய்யவும்)

1.	6.
2.	7.
3.	8.
4.	9.
5.	10.

விடை அனுப்பும் பாரங்களில் 'சிசர்ஸ் போட்டி' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவற்றை இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்டின் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றுக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

தபால் பை எண் 5029 மதராஸ்-1 தபால் பெட்டி எண் 12, விசாகப்பட்டினம் 1. தபால் பெட்டி எண் 1620 கோயமுத்தூர்-18.

தயவு செய்து பெரிய எழுத்துக்களில் எழுதவும்

பெயர் .....

முகவரி .....

.....

.....

வயது ..... தொழில் .....

14 வட்டார மொழிகளும் பயன்படுத்தப்படுமா?

புதுடில்லி, ஆக. 21—

அரசியல் சட்டத்தின் 8-வது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளான 14 வட்டார மொழிகளையும் மத்திய அரசு ஊழியர் தேர்வுக் குழு அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் தேர்வுகளில் பயன்படுத்தத் துவங்கும் என்று நிச்சயமாகத் தெரியவருகிறது.

இதை கடந்த வாரத்தில் நாடாளுமன்றத்தில், அமைச்சர் சூசகமாகத் தெரிவித்திருந்தார்.

இதற்காகக் குழு செய்துவரும் ஆயத்த வேலைகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்குத் தேவையான புதிய ஊழியர்களும், தட்டுப் பொறிகள் போன்ற இதர வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது.

தகுதி வாய்ந்த விடை திருத்துவோரும் நியமிக்கப்படவிருக்கின்றனர். கூடியவரையில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழி அறிவு பெற்றவர்களாக இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விரைவில் இதை அமுல் செய்ய அரசும், ஊழியத் தேர்வுக் குழுவும் முயலுகின்றனவாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

காவிரி நீர் ஒப்பந்தம் குந்தகப்படாது

அமைச்சர் மு. கருணாநிதியிடம் மைசூர் முதல்வர் உறுதிமொழி

புதுடில்லி, ஆக. 20—

மேமாவதி நீர்த் தேக்கம் கட்டுவதால் 1924-ம் ஆண்டில் மைசூருக்கும் – தமிழகத்திற்கும் காவிரி நீர்ப்பாசனம் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் குந்தகப்படக்கூடிய சூழ்நிலைகள் உருவாகு மென்ற அச்சம் தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது; அந்த அடிப்படையில், இரு மாநில அமைச்சர்கள் அளவிலும் -- அதிகாரிகள் அளவிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

தமிழக அரசின் சார்பில் பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும், மைசூர் அரசுச் சார்பில் முதலமைச்சர் வீரேந்திர பட்டீலும் கலந்துகொண்டனர்.

இதனியொட்டி, 1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படி தமிழகத்திற்கு உரித்தான தண்ணீர் அளவு சிறிதேனும் குறைவின்றித் தொடர்ந்து அனுப்புவதற்கு மைசூர் அரசு உறுதியளித்துள்ளது; அந்த உறுதி நிலுவேற்றப்படும் வகையில், விதிகள் -- நடைமுறை ஏற்பாடுகள் ஆகியன பற்றி விரிவான விவாதம் நடத்தப்பட்டிருக்கிறது.

டெல்லியில் நடந்துள்ள பேச்சுவார்த்தைகள் குறித்து தமிழக முதலமைச்சருடன் கலந்து அரசின் சார்பில் மேற்கொண்டு கருத் தறிவிக்கப்படும்.

கடந்த இரண்டு நாட்களாக மத்திய தண்ணீர்—மின்சாரக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகளும், இரண்டு மாநில்களிலும் சேர்ந்த அதிகாரிகளும் அடங்கிய மாநாடு டில்லியில் நடைபெற்றதைத் தொடர்ந்து இன்றையத் தமிழக—மைசூர் அமைச்சர்களின் சகந்திப்பும், பேச்சுவார்த்தைகளும் நடந்தன.

இதற்கு முன்னதாக எந்த அடிப்படையில் மேமாவதி தண்ணீரைப் பங்கீட்டுக்கொள்வது என்ற பதற்கு 1924-ஆம் ஆண்டிலேயே இந்த இரண்டு மாநிலங்களும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன.

இன்றைக் கூட்டத் தில், மேமாவதி உடன்பாட்டு விதிகள், மேமாவதி அணைக்கட்டுமேது கண்டிப்புடன் பின்பற்றப்படும் என்று மைசூர் அரசாங்கம் உறுதியளித்தது.

தமிழக அரசின் சுருத்து என்ன வெவில், '1924-ஆம் ஆண்டில் இரு மாநிலங்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு இணங்கத் தமிழகத்திற்குத் தண்ணீர் குறைக்கப்படாமல் தொடர்ந்து கிடைத்து வரவேண்டும் எனவது தான என்று தமிழ்ப் பொதுப்பணி அமைச்சர் கருணுநிதி கூறினர்,

"மேமாவதி அணை கட்டப்பட்டாலும் 1924-ஒப்பந்தப்படி காவிரித் தண்ணீர் தொடர்பாக மைசூர் அரசு கடைப்பிடிக்கும்" என்று மைசூர் முதலமைச்சர் வீரேந்திர பட்டில் உறுதியளித்தார்.

அந்த உறுதிமொழியின் பேரில், தண்ணீர் பிடிப்புப் பகுதியில் எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதையும், மழை பெய்யும் அளவு காவிரியில் வந்து சேரும் தண்ணீரின் அளவு பற்றியும் விரிவான ஆய்வு நடத்தும்படி மத்திய தண்ணீர் மற்றும் மின்சக்திக் குழுவின் தலைவரைக் கேட்டுக்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. இவருக்கு உதவியாக இரு மாநில்களின் தலைமைப் பொறியில் நிபுணர்களும் பணியாற்றுவார்கள்.

இக்குப் பேச்சுவார்த்தைகள் பற்றி அமைச்சர் கருணுநிதியைக் கேட்கப்பட்டபோது, மாநாட்டின் முடிவுகளின் தாம் தமிழக முதலமைச்சர் அண்ணுவிடம் தெரிவிக்கப்போவதாகவும், அதன் பின்னரே இனி தமிழக எடுக்கப் போகும் நடவடிக்கை பற்றி மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும் தான் என்று தமிழ்ப் பொதுப்பணி அமைச்சர் கருணுநிதி கூறினர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கவில்லே. அப்படி உடனடியாக மத்திய அரசு நடவடிக்கை எடுத்திருந்தால் அந்த அளவுக்கு நெருக்கடி முற்றியிருக்காது.

"ஆறுதாபத்தில் இதுபோன்று 10 ஆலேகள் மூடப்பட்டிருக்கின்றன. மகாராட்டிரத்தில் இரண்டு ஆலேகள் மூடப்பட்டுள்ளன. அரசாங்கம் இரண்டு ஆலேனே எடுத்து நடத்துகிறது. அவ்விதம் அரசு எடுத்து நடத்தும் ஆலேகள் எப்படி நடக்கின்றன என்பதை பாரத்துவர இங்கிருந்து ஒரு அதிகாரியை அனுப்பி பார்த்துவரச் செய்தேன்.

"இப்படி மாநில அரசு தன்னுலியன்ற முயற்சிகளே மேற்கொண்டிருக்கிறது; இந்த நிலேயில் காங்கிரசார் ஒதலுழைத்து 'எக்சைஸ்' வரி நீக்கப்படவேண்டும் அல்லது குறைக்கப்பட வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புலே, அது எனது கரங்களே வலிபுடுத்துவதாக அமையும்; அந்த வலிவு நாட்டு மக்களின் நன்மைக்கே பயன்படும் என்ற உறுதியை காங்கிரசாருக்கு அளிக்க விரும்புகிறேன்; ஒரு போதும் அந்த வலிவு காங்கிரசுக் கட்சியை அழிக்கப் பயன்படாது.....

ரா. கிருஷ்ணசாமி (காங்): — "மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து ஆலேகளுக்கு உதவலாமே!"

முதலமைச்சர் அண்ணு :—"எந்த ஆலேகள், 'மின்சாரக் கட்டணம் குறைக்கப்படாவிட்டால் ஆலேகள் இயங்க வசதியாக இருக்கும்' என்று அறிவித்தனவோ, அந்த ஆலேகளுக்குக் கட்டணம் குறைக்கப்பட வசதி செய்யப்பட்டிருக்கிறது.

"'விற்பனே வரி குறைந்தால் நல்லது' என்று கருத்துப்படக்கூடிய ஆலேகளுக்கு வரி குறைத்திட வேண்டும் என்பது பற்றி ஆலோசித்து முடிவெடுக்க இருக்கிறோம்.

"மத்திய வணிக அமைச்சர் தினேஷ் சிங் தமிழகம் வந்து நிலேமைகளே ஆராய்ந்து, தொழில் அதிபர்களுடனும் — தொழிலாளர் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புதல் தந்துள்ளார். அவர் வருகிறபோது, கட்சிப் பாகுபாடு இல்லாமல் உரிமை நிலேயை எடுத்துச்சொல்லி 'எக்சைஸ் வரி குறைக்கப்பட வேண்டும்' என்பதையும் காங்கிரசார் எடுத்துக் கூறிட வேண்டும்."

---முதலமைச்சர் அண்ணு

(சட்டமன்ற மேலவையில் நிறி ஏதுக்கல் மசோதா மீது நடந்த விவாதத்துக்குப் பதிலளித்து ஆற்றிய உரையில்.)

5 3/4 சதவிகித மாநில அரசாங்கக் கடன்கள்--1980

மாநிலம்	தொகை (கோடி ரூபாய்களில்)	வெளியீட்டு விலே தூற்றுக்கு ரூ.	மாநிலம்	தொகை (கோடி ரூபாய்களில்)	வெளியீட்டு விலே தூற்றுக்கு ரூ.
1. ஆந்திரப் பிரதேசம்	11.00	98.00	9. மகாராட்டிரம்	20.00	99.50
2. அசாம்	2.50	97.50	10. மைசூர்	6.00	98.00
3. பிகார்	3.50	97.50	11. ஒரிசா	4.50	98.00
4. குசராத்	11.75	99.50	12. பஞ்சாப்	3.00	98.00
5. அரியானு	2.75	98.00	13. இராஜஸ்தான்	5.00	98.00
6. கேரளம்	5.00	98.00	14. உத்தரப் பிரதேசம்	10.00	98.00
7. மத்தியப் பிரதேசம்	5.50	98.00	15. மேற்கு வங்காளம்	8.00	98.00
8. தமிழ்நாடு	18.00	98.00		116.50	

இந்தக் கடன்கள் எல்லாவற்றுக்கும் தொகைகள் செலுத்துதல் 1968 செப்டம்பர் 2-ந் தேதி இங்கிறிமை மன்று தொடங்கி 1968 செப்டம்பர் 7-ந் தேதி சனிக்கிழமையன்றோ, அல்லது ஒவ்வொரு கடன் வெளியீட்டுக்கும் ஏறக்குறைய ஈரான தொகை வசூலானவுடன் அதற்கு முன்னதாகவோ அறிவிப்பு இலல்மை முடிவும். ஆனும், இந்தக் கடன் வெளியீட்டுப்புக்கும் காலத்தில் ஒன்றம் பண்டிதை விழுமுறைகள் வரும் விசேச் சூழ்நிலேகள் காரணமாக, கேரள அரசாங்கக் கடன் விலேத்தநிலேனா முடிவு தேதியானது 1968 செப்டம்பர் 10-ந் தேதி வரையில் நீடிக்கப் படும். கடன் கோரி அறிவிக்கப்பட்ட தொகைகளுக்கு அதிகமாகப் பத்து சதவிகிதம் வரையிலான தொகைகளுக்கு தம மிடம் வைத்துக்கொள்ள எல்லா மாநில அரசாங்கங்களுக்கு உரிமை பெற்றுள்ளன.

இந்தக் கடன்கள், 12 ஆண்டுகளுக்குப் பிறகு--அதாவது, 1980 செப்டம்பர் 2-ந் தேதியன்று--சமத் தொகை யில் மீட்டுக்கொள்ளத்தக்கவையாகும். இவற்றுக்கான வட்டி ஆறு மாதங்களுக்கு ஒருமுறை—அதாவது, ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் 2-ந் தேதியன்றும், மற்றும் செப்டம்பர் 2-ந் தேதியன்றும்—அளிக்கப்படும். இந்த எல்லாக் கடன் களுக்கும் கிடைக்கும் வட்டிகளது, 1961-ம் ஆண்டை வருமான வரிச் சட்டப்படி வரி வருவிபடதற்குரியதாகும். இந்தக் கடன்கள் எல்லாவற்றுக்கும் சொக்கமாகவோ அல்லது கெக் உருவிலோ தொகை செலுத்தலாம். மேற்கொண்டும் கடன்களின் செல்வுபிட்டிகளுமைட, அந்தந்த மாநிலங்களின் புதிய கடன்களாகச் சமத் தொகைகளில் மாற்றிக்கொள்ளு வதற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

மாற்றிக்கொள்ள அளிக்கப்படும் கடனின் பெயர்	வழங்கப்பட வேண்டியதான புதிய கடனின் பெயர்
(1) 4% ஆந்திர மாநில அபிவிருத்திக் கடன், 1968.	5¾% ஆந்திரப்பிரதேச மாநில அபிவிருத்திக் கடன், 1980.
(2) 4% பிகார் மாநில அபிவிருத்திக் கடன், 1968.	5¾% பிகார் மாநில அபிவிருத்திக் கடன், 1980.
(3) 4% திருவாங்கூர் – கொச்சி மாநில அபிவிருத்திக் கடன், 1968.	5¾% கேரள மாநில அபிவிருத்திக் கடன், 1980.
(4) 4% மத்தியப் பிரதேச மாநில அபிவிருத்திக் கடன், 1968.	5¾% மத்தியப் பிரதேச மாநில அபிவிருத்திக் கடன், 1980.
(5) 4% மத்தியப் பாரத மாநில அபிவிருத்திக் கடன், 1968.	5¾% மத்தியப் பிரதேச மாநில அபிவிருத்திக் கடன், 1980.
(6) 4% தமிழ்நாடு கடன், 1968.	5¾% தமிழ்நாடு கடன், 1980.
(7) 4% சௌராஷ்டிர மாநில அபிவிருத்திக் கடன், 1968.	5¾% மகாராஷ்டிர மாநில அபிவிருத்திக் கடன், 1980.
(8) 4% மைசூர் மாநில அபிவிருத்திக் கடன், 1968.	5¾% மைசூர் மாநில அபிவிருத்திக் கடன், 1980.
(9) 4% ஒரிசா அரசாங்கக் கடன், 1968.	5¾% ஒரிசா அரசாங்கக் கடன், 1980.
(10) 4% பஞ்சாப் கடன், 1968.	5¾% பஞ்சாப் கடன், 1980.
(11) 4% இராஜஸ்தான் மாநில அபிவிருத்திக் கடன், 1968.	5¾% இராஜஸ்தான் மாநில அபிவிருத்திக் கடன், 1980.
(12) 4% உத்தரப் பிரதேச மாநில அபிவிருத்திக் கடன், 1968.	5¾% உத்தரப் பிரதேச மாநில அபிவிருத்திக் கடன், 1980.
(13) 4% மேற்கு வங்காளக் கடன், 1968.	5¾% மேற்கு வங்காளக் கடன், 1980.

மாற்றிக்கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட செக்யூரிட்டிகளுக்கு 1968 செப்டம்பர் 2-ந் தேதி (உட்பட) வரை மில் ஆண்டுக்கு 4 சதவிதம் வட்டி அளிக்கப்படும்.

இந்தக் கடன்கள் எல்லாவற்றுக்குமான விண்ணப்பங்கள்: பெங்களூர், மும்பாய் (ஃபோர்ட் மற்றும் பைகுல்லா), கல்கத்தா, காள்பூர், சென்னே, நாகபுரி, மற்றும் புதுடில்லியிலுள்ள ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா வின் அலுவலகங்களிலும் பாட்னுவில் உள்ள மீட்டே பாங்க் ஆப் இந்தியாவின் மேலேயும் ஐதராபாத்தில் உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் ஐதராபாத் மேலேயும் மற்றும் ஜெம்மு-பூர்ஞ்சின் ஸ்டேட் பாங்க் ஆப் பிகானீர் அண்ட் ஜெம்மு-பூர்ஞ் மேலேயும் பெற்றுக்கொள்ளப்படும்.

அந்தந்த மாநிலங்களுக்குள் உள்ளவையான மேற்காணும் மற்ற இடங்களிலும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

(i) அரசாங்கக் கருலுல வேலேயை நடத்திவரும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் துணை பாங்கிகளுடைய மேகள்.

(ii) அரசாங்கக் கருலுல வேலேயை நடத்திவரும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் துணை பாங்கிகளின் மேகள் இல்லாத இடங்களில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் மேகள்.

(iii) மேற்கூறப்பட்ட மேகள் இல்லாத இடங்களில் கருலுலங்கள் மற்றும் துணைக் கருலுலங்கள் (அரசாம் மற்றும் மேற்கு வங்க மாநிலங்கள் நீங்கலாக).

பஞ்சாப் மற்றும் அரியானு மாநில அரசாங்கக் கடன்களுக்கான விண்ணப்பங்களும் சண்டிகாரில் உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் பெற்றுக்கொள்ளப்படும்.

இந்தகான தொகை பெறும் எந்த அலுவலகத்திலிருந்தும், இந்தக் கடன் அறிக்கைகளின் பிரதிகள் மற்றும் விண்ணப்ப பாரங்களேப் பெறலாம்.

சென்னேயும், மும்பாய் (ஃபோர்ட் மற்றும் பைகுலேயா), கல்கத்தா, காள்பூர், சென்னே, நாகபுரி மற்றும் புது டில்லியிலுள்ள ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் அலுவலகங்களில் விண்ணப்பங்களே அளிக்கும் விண்ணப்பதாரர்கள், தாங்கள் விண்ணப்பிக்கும் கடனுக்கு அளவுக்கு மீறின தொகை செலுத்தப்படுவதற்கும் பத்திரம், அதற்குப் பிறகும் கடன் தொகை பெறுவதற்குரிய நிலேயுள்ள மற்ற மாநில கடன்கள் எதிலும், தாங்கள் தொறந்தே நிரப்பப்பெ கப்பட்டுவதான ரொக்கத் தொகையை மாற்றிக்கொள்வதற்குத் தங்களுடைய விருப்பத்தைத் தெரிவிக்கலாம். விண்ணப்பதாரர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்வதற்காக 'ஸ்டேட் விருப்பப் பாரம்' ஒன்றைப் பூர்த்தி செய்து அந்தப் பாரத்தைத் தங்களுடைய விண்ணப்பங்களுடன் செலுத்த வேண்டும். இந்த 'ஸ்டேட் விருப்பப் பாரம்' பிரதேச ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்கூறிய அலுவலகங்களை எதிலிருந்தும் பெறலாம்.

மக்கட் தொகை அடிப்படையில் மாவட்டப் பிரிவினை

சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள் பரிசீலனை

சட்ட மன்றத்தில் கேள்வி — அமைச்சர் மதியழகன் பதில்

சென்னே, ஆக. 19—

"நிர்வாக நலனுக்காக, மாவட்டங்களின் அளவைச் சிறிதாக்குவது பற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது" என்று, வருவாய்த் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் மேலவை யில், கேள்வி நேரத்தின்போது கூறினர். அவர் மேலும் விளக்கிய தாவது:—

"மாவட்ட நிர்வாகச் சீரமைப்பு பற்றிய குழு இதுபற்றி ஆராய்ந்து ஒரு மாவட்டம் 20 இலட்சம் மக்கள் தொகைக்கு மேற்படாமலும், 20 பிளாக்குகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறது.'

மற்றொரு கேள்விக்கு அமைச்சர பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது :—

"மாவட்டங்களேப் பிரிக்கும் போது, புகோள அமைப்பு—நிர்வாக வசதி, தொழில் வளர்ச்சி ஆகிய அம்சங்களேயும் அரசு பரிசீலனே செய்யவேண்டியிருக்கிறது.

"மாவட்டச் சீரமைப்பு சம்பந்தமாக முடிவு செய்யும்போது, புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்குவது பற்றி பரிசீலிக்கப்படும்."

"இராமனுதபுர மாவட்டம் மிகப் பெரியதாக இருப்பதால், திமுக்கு இராமனுதபுர மாவட்டம்-மேற்கு இராமனுதபுர மாவட்டம் என்று பிரிக்கும் உத்தேசம் உண்டா?" என்று கேட்டதற்கு, 'இதுபற்றியும் அரசு பரிசீலனே செய்யும்' என்று அமைச்சர் கூறினர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

தமிழக அமைச்சரவைமீது காங்கிரசுகாரர்களால் கொண்டுவரப் பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆக. 28-ம் நாள்முதல் நான்கு நாட்கள் சட்டமன்றத்தில் விவாதம் நடைபெறும்.

14 வட்டார மொழிகளும்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரையில் நடைபெற்றுள்ள ஏறமாறுகளெல்லாம் கவனிக்குமபோது, '1969 பரீட்சையின போது சில பாடங்களுக்கு எந்த வட்டார மொழிகளிலும் விடை எழுதலாம்' என்ற முடிவு, எல்லா இந்திய மொழிகளும் வருங்காலத்தில் ஆட்சிமொழிகளாகும் என பதற்கான துவக்கமாகக் கருதலாம் என நம்பப்படுகிறது.

நேசிட முன்னேற்றக் கழகத்திற்காக' இரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.: அவர்களே ஆசிரியராகவும், வெளியீடு பொறுப்பும், அச்சுபொறுப்பும் கொண்டு எறுவி அச்சகத்தில் (24, ஞாயிறுசாலை செல்லு தெரு, சென்னை-10) ஏறிந்து வெளியிடுகிறேறு.